# "காரைதீவுப் பிரதேசப் பண்பாடும் பழமொழிகளும் ஓர் ஆய்வு"


**Supervisor**
*Dr. MAM. Rameez,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Ms. G. Sanathani,*
*Department of Languages,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*


## ஆய்வுச் சுருக்கம்


இன்றைய காலக்கட்டத்தில் வளர்ந்துவரும் ஆய்வுகளுள் ஒன்றாக நாட்டுப்புறவியல் ஆய்வு விளங்குகின்றது. மனித இனமானது மொழியைக் கருத்துப் பரிமாற்றத்திற்குரிய ஊடகமாகக் கொண்ட காலத்திலிருந்தே வாய்மொழி இலக்கியத்தினுடைய தோற்றம் இடம் பெற்றிருக்க வேண்டும். நாட்டாரிலக்கியம் சமூகத்தைக் காட்டும் கண்ணாடி எனக் கூறலாம். இலக்கண வரம்பிற்கு உட்படாமல் எழுத்தறிவில்லாத நாட்டுப்புற மக்களிடையே எழுந்த உணர்ச்சிகளையும் கற்பனைகளையும் வெளிப்படுத்துவதாகவே நாட்டார் இலக்கியம் அமைந்துள்ளது.

நாட்டார் இலக்கியம் உள்ளங்களின் உணர்ச்சிவெளிப்பாடாகும். எளிமை, இனிமை, இசை, உண்மை போன்றவைகள் இந்நாட்டார் இலக்கியங்களில் உள்ளடங்கி இருக்கின்றன. பாடல், கதை, கதைப்பாடல், பழமொழி, விடுகதை என்பவைகள் நாட்டார் இலக்கிய வடிவங்களாகக் கொள்ளப்படுகின்றன.

இவற்றுள் உள்ளடக்கப்பட்டுள்ள பழமொழிகளை மையப்படுத்தியே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மூதறிவிலிருந்து தோன்றிய மொழி பழமொழி. நினைப்பிற்கு எட்டாத பழங்காலத்திலிருந்து மக்கள் வாழ்வில் வாழ்ந்து வருபவை அவை என்பதை பழமொழியிலுள்ள 'மொழி' என்னும் சொல் உறுதிப்படுத்துகின்றது. அறிவாலும் அனுபவத்தாலும் சிறந்த பெரியோர்களால் கூறப்பட்டு, பின்னர் வழக்கில் வந்தவையே பழமொழிகள். இப்பழமொழிகள் மக்களின் பண்பாட்டினை அறிந்துகொள்ள உகந்த ஆவணமாக அமைந்துள்ளன. பழமொழி எப்போது உருவானது, யாரால் உருவாக்கப்பட்டது என்று அறுதியிட்டு கூறமுடியாது. தொல்காப்பியரும் இதனை முதுமொழி என்று கூறுவார்.

கிழக்கு மாகாணத்தில் அம்பாரை மாவட்டத்தில் காரைதீவுப் பிரதேசம் அமைந்துள்ளது. இப்பிரதேசத்தில் வாழும் மக்கள் தமது அன்றாட வாழ்வில் தொழில், மதநம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், அரசியல், பொருளாதாரம், சமூகநிலைமைகள் போன்ற இன்னோரன்ன விடயங்களில் பழமொழிகளைப் பயன்படுத்துகினறனர். இப்பிரதேசத்தில் நாட்டார் இலக்கியம் தொடர்பான ஆய்வுகள் அரிதாகவே இடம்பெற்றபோதிலும் பண்பாடும் பழமொழிகளும் பற்றி இதுவரை எந்த ஆய்வும் இடம் பெறவில்லை. இக்குறையை நிவர்த்தி செய்வதாகவே இவ்வாய்வு அமைந்துள்ளது.

காரைதீவுப் பிரதேசத்தில் வழங்கிவரும் பழமொழிகளை இனங்கண்டு, அவை எந்தளவுக்கு காரைதீவு பிரதேசமக்களின் வாழ்வியலை: பண்பாட்டை பிரதிபலிக்கின்றன என்பதனை வெளிக்கொண்டுவருவதைப் பிரதான நோக்கமாகவும் காரைதீவு பிரதேசத்தில் காணப்படும் பழமொழிகளை எழுத்துருப்படுத்தி, அவை அழிந்து செல்லாது அவற்றை சேகரித்து ஆவணப்படுத்துவதன் மூலம் எதிர்கால சந்ததியினரும் பயன்பெற வகைசெய்தல், இப்பழமொழிகளில் இப்பிரதேச பேச்சுமொழியின் செல்வாக்கு எந்தளவுக்குக் காணப்படுகின்றது என்பதை கண்டறிதல் ஆகிய உபநோக்கங்களையும் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாய்வில் முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. நாட்டார் இலக்கியம் தொடர்பான தகவல்களை அறிந்தவர்கள், காரைத்தீவுப்பிரதேச மக்கள் ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட நேர்காணல்களும் நாட்டார் இலக்கியங்களும் முதலாம் நிலைத்தரவுகளாகவும் இவ்வாய்வோடு தொடர்பான இதுவரை எழுதப்பட்ட நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், முதலியன இவ்வாய்வுக்கான இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாய்வில் சமூகவியல், மொழியியல், விளக்கமுறை போன்ற அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

காரைத்தீவுப் பிரதேசத்தில் வழங்கப்பட்டுவரும் நாட்டார் பழமொழிகளினூடே இப்பிரதேசமக்களின் பண்பாடு: தொழில், மதநம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், மரபுகள், அரசியல், பொருளாதாரம், சமூகநிலைமைகள் முதலிய இன்னோரன்ன அம்சங்களை அறிந்துகொள்ள முடியும்.

**Key Words:** பண்பாடு, பழமொழி